தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விஜய, சித்திரை 23, திருவள்ளுவர் ஆண்டு – 2044

2013 மே 6, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்."

பிறர் பொருளையும் தம் பொருளாக நினைத்து நடுவுநிலைமை தவறாது வாணிபம் செய்வதுதான் வணிகர்களுக்கு உரிய வாணிப முறை ஆகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 395, மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

395—

புதிய மின்மாற்றி

***5074—திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, அஞ்சூர் ஊராட்சி, சின்னபனமுட்லு கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2013 மே 6

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

பர்கூர் தொகுதி, அஞ்சூர் ஊராட்சி, சின்னபனமுட்லு கிராமத்திற்கு தற்போது 250 கே.வி.ஏ. திறனுள்ள அஞ்சூர் மின்மாற்றி எண் 3–ன் மூலமாக சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதியிலுள்ள மின்னிணைப்புகளின் மொத்த மின் பளு 214.68 கே.வி.ஏ. மட்டுமே உள்ளதால், தற்போதுள்ள 250 கே.வி.ஏ. திறனுள்ள மின்மாற்றியே போதுமானதாகும். எனவே, புதிய மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஒன்றரை கோடி தொண்டர்களின் பேச்சும், மூச்சும் அம்மா என்று அழைக்கின்ற எங்களது ஆத்மசாந்தியாய், ஆண்டவனாய், மனித வடிவில் எங்களுக்கு வரமாய் கிடைக்கப்பெற்ற தெய்வத் தாயே, தங்களது பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன் அம்மா! உலகுவாழ் தமிழர்களின் நிலையுணர்ந்து, அவர்களது உற்ற தாயாய், பாதுகாப்புப் பெட்டகமாய் நான் இருக்கிறேன் என்கின்ற நம்பிக்கையே, நற்றமிழே தாங்கள் அம்மா! கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இருள் சூழ்ந்த தமிழகத்தை மீட்டெடுத்து, என்றும் விழாக்கால ஒளிபோல மின் பற்றாக்குறை இல்லாத, மிகைமின் தமிழகத்தை உருவாக்கிட ரூ.7,000 கோடி திட்ட மதிப்பீட்டில் மின்சாரம் தயாரிக்க மின்சாரத் துறைக்கு அறிவிப்புச் செய்து, புதிய வரலாறு படைத்த வெற்றிச் சாதனையின் வீரத் திருமகள் தாங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) தங்கள் தாள்போற்றி வணங்குகிறேன்.

எங்களது கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அஞ்சூர் ஊராட்சியிலே கிரானைட் தொழிற்சாலைகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், மின் பற்றாக்குறை அடிக்கடி வருவதால், அந்தத் தொழிற்சாலைகள் இயங்க முடியாத நிலையில் உள்ளதால்தான், அங்கே ஒரு புதிய மின்மாற்றி

2013 மே 6]

அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் கனிவுடன் கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவுகூர்ந்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, எதிர்வரும் காலங்களில் ஆவன செய்து, அதனை நிறைவேற்றித் தருவாரா என்று கேட்டு, இடம் அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பர்கூர் தொகுதியில் அஞ்சூர் ஊராட்சி, சின்னபனமுட்லு கிராமத்தில் தற்போது 250 கே.வி.ஏ. திறனுள்ள அஞ்சூர் மின்மாற்றி எண் 3–ன் மூலமாக சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதியிலே 220 வீட்டு மின் இணைப்புகளும், 2 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இணைப்புகளும், 3 தொழில் மின் இணைப்புகளும், 10 விவசாய மின் இணைப்புகளும் மற்றும் 14 இதர மின் இணைப்புகளும் இருக்கின்றன. ஆக மொத்தம் 194.84 கிலோ வாட், அதாவது 214.68 கே.வி.ஏ.* (Kilo Volt Ampere) *எனவே, தற்போதுள்ள 250 கே.வி.ஏ. மின்மாற்றிக்கு உட்பட்டே, 214.68 என்ற அளவிலேயே மின் பளு இருக்கின்ற காரணத்தினால், தற்போது இந்தப் பகுதியிலே கூடுதலாகவோ அல்லது புதியதாகவோ ஒரு மின்மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.*

முற்பகல் 10–05

அந்தப் பகுதியிலே மின் பளு அதிகரித்து வருகிறது என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே மின் பளு அதிகரிக்குமேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, அவர் சொன்னதுபோல, அதிகரிக்கும் மின் பளுவின் தேவைக்கேற்ப, கூடுதலாக மின்மாற்றியை அங்கே நிறுவுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2013 மே 6

திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்வரும் காலங்களில் மின் பற்றாக்குறையின் நிலையினைக் கருத்திலே கொண்டு, அங்கே புதியதாக ஒரு மின்மாற்றியை அமைத்துத் தர ஆவன செய்யப்படும் என்பதை பேரவையில் அறிவித்த, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நான் வணங்குகிற இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு இடம் அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 396, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

396—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***15903—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள். கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஊராட்சி, 1—வது வார்டு, பெரியார் நகரில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், விராலிமலை ஊராட்சி, 1—வது வார்டு, பெரியார் நகர் 2006 மறு ஆய்வின்படி தனிக்குடியிருப்பாக இல்லை. இது விராலிமலை குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இப்பகுதிக்கு, இவ்வூராட்சியைச் சேர்ந்த மணமேட்டுப்பட்டி குடியிருப்பில் அமைக்கப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்